DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No. 76/2025

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW. 4/ PW.4

| Name | தினகரன் | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's/ Husband's Name | தண்டபாணி | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 30.07.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(Accused present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது காடாம்புலியூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி சிவஞானம் என்பரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் என் கையொப்பம் இல்லை. மேற்படி ஆவணத்திலுள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரிகள் எனக்கு பழக்கமானர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 11.01.2024 அன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் காடாம்புலியூர் காவல் உதவி ஆய்வாளர் என் முன்பும் சிவஞானம் முன்பும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் மேற்படி பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்

என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>**

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.76/2025

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW.3/PW.3

| Name | கோவிந்தராசு | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's/ Husband's Name | ராமசாமி | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 30.07.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(Accused present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது நெல்லிக்குப்பம் வசித்து வருகிறேன். நான் தற்போது பெட்ரோல் பங்க் மேலாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆனந்தகிருஷ்ணன், அ.சா.2 சந்திரசேகர் ஆகியோர்களையும் ஆஜர் எதிரிகளையும் தெரியும் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது காடம்புலியூர் பெரியபுறங்கணி சாலையில் அமைந்துள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பும் பம்பு பாயாக சந்திரசேகர் மற்றும் ஆனந்தகிருஷ்னன் ஆகியோர்கள் பணியாற்றி வந்த போது கடந்த 08.01.2024 அன்று மாலை சுமார் 4 10 மணியளவில் எங்கள் பெட்ரோல் பங்கில் ஆனந்தகிருஷ்ணன் எனபவர் பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் ஹீரோ ஸ்ப்ளெண்டர்

பிளஸ் மற்றும் RRRஎன்ற முகப்பு பெயர் கொண்ட ராயல் என்ஃபீல்டு ஆகிய இருசக்கர வாகனங்களில் வந்து அவர்கள் வந்த சென்டர் பிளஸ் வாகனத்திற்கு ரூபாய் 100க்கு பெட்ரோல் நிரப்ப சொல்லி மணிவண்ணன் கேட்டார் என்றும் ஆனந்தகிருஷ்ணன் பெட்ரோல் போட்டுவிட்டு பணம் கேட்டதற்கு மணிவண்ணனும் அவருடன் வந்த ராஜ்மோகன் கார்த்தி என்கிற கார்த்திக் ராஜா ஆகியோர்கள் வண்டியில் இருந்து இறங்கி வந்து அசிங்கமாக திட்டி எங்களிடம் பணம் கேட்கிறாய் என்று ஆனந்தகிருஷ்ணன் சட்டை பிடித்து மூவரும் கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் பின்னிட்டு ராஜ்மோகன் அருகில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பட்டாக்கத்தை எடுத்து வந்த ஆனந்தகிருஷ்ணனை வெட்ட ஓடிவந்த போது அங்கு இருந்த சந்திரசேகர் அவரை தடுத்து அனுப்பி வைத்தார் என்றும் அந்த இடத்தில் வாடிக்கையாளர்கள் பெட்ரோல் போட வரவே ராஜ்மோகன் அவர் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி இனிமேல் உன்னை எங்கேயாவது பார்த்தேன் என்றால் இந்த கத்தியால் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு ராஜ்மோகன் மற்றும் அவருடன் வந்தவர்களும் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும் மேற்படி தகவலை ஆனந்தகிருஷ்ணன் மேற்படி பெட்ரோல் பங்க் உரிமையாளரான என்னிடம் தகவல் சொல்லிவிட்டு கடந்த 9.1.204 அன்று காடாம்புலியூர் காவல் நிலையத்தில் மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளித்தார் என்றும் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பில் இருந்து விலகி என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.76/2025

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW.2 / PW.2

| Name | சந்திரசேகர் | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Father's/ Husband's Name | குப்புசாமி | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 30.07.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(Accused present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கொட்டிகோணகுப்பம் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆனந்தகிருஷ்ணன் பட்டியல் சாட்சி கோவிந்தராசு ஆகியோர்களையும் ஆஜர் எதிரிகளையும் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது நான் காடம்புலியூர் பெரியபுறங்கணி சாலையில் அமைந்துள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பும் பம்பு பாயாக பணியாற்றி வந்த போது கடந்த 08.01.2024 அன்று மாலை சுமார் 4 10 மணியளவில் எங்கள் பெட்ரோல் பங்கில் என்னுடன் பெட்ரோல் நிரப்பும் பாயாக வேலை செய்யும் ஆனந்தகிருஷ்ணன் எனபவர் பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் ஹீரோ ஸ்ப்ளெண்டர் பிளஸ்

மற்றும் RRRஎன்ற முகப்பு பெயர் கொண்ட ராயல் என்ஃபீல்டு ஆகிய இருசக்கர வாகனங்களில் வந்து அவர்கள் வந்த சென்டர் பிளஸ் வாகனத்திற்கு ரூபாய் 100க்கு பெட்ரோல் நிரப்ப சொல்லி மணிவண்ணன் கேட்டார் என்றும் ஆனந்தகிருஷ்ணன் பெட்ரோல் போட்டுவிட்டு பணம் கேட்டதற்கு மணிவண்ணனும் அவருடன் வந்த ராஜ்மோகன் கார்த்தி என்கிற கார்த்திக் ராஜா ஆகியோர்கள் வண்டியில் இருந்து இறங்கி வந்து அசிங்கமாக திட்டி எங்களிடம் பணம் கேட்கிறாய் என்று ஆனந்தகிருஷ்ணன் சட்டை பிடித்து மூவரும் கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் பின்னிட்டு ராஜ்மோகன் அருகில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பட்டாக்கத்தை எடுத்து வந்த ஆனந்தகிருஷ்ணனை வெட்ட ஓடிவந்த போது அங்கு இருந்த நான் அவரை தடுத்து அனுப்பி வைத்தேன் என்றும் அந்த இடத்தில் வாடிக்கையாளர்கள் பெட்ரோல் போட வரவே ராஜ்மோகன் அவர் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி இனிமேல் உன்னை எங்கேயாவது பார்த்தேன் என்றால் இந்த கத்தியால் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு ராஜ்மோகன் மற்றும் அவருடன் வந்தவர்களும் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும் மேற்படி ஆனந்தகிருஷ்ணன் மேற்படி பெட்ரோல் பங்க் உரிமையாளரான நெல்லிக்குப்பம் சேர்ந்த கோவிந்தராசு என்பவரிடம் தகவல் சொல்லிவிட்டு கடந்த 9.1.204 அன்று காடாம்புலியூர் காவல் நிலையத்தில் மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளித்தார் என்றும் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பில் இருந்து விலகி என்று சொன்னால் சரியல்ல

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.